( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-11

## வினாத்தாள் - I

சுட்டெண்:- ...................................................

நேரம் :- 1 மணித்தியாலம்

- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  * **உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
  * **மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**

- **1 ஆம், 2 ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

(01) தாகம் - தாவரம் - இயற்கை

(1) 

(2) 

(3) 

(02) வேடிக்கை - காற்று - வெடித்தல்

(1) 

(2) 

(3) 

(03) கீழே தரப்பட்டுள்ள இலக்கங்களினதும் எழுத்துக்களினதும் நிரையை வாசியுங்கள்.

| 4 | 4 | P | 3 | 3 | L | P | P | 4 | T | L | 4 | 2 | L | 6 | L | N | N | 3 | 4 | P | N | P |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

இங்கு ஒரு இலக்கத்திற்கு முன்னும் பின்னும் ஒரே வகை காணப்படும் எழுத்து யாது?

(1) P (2) T (3) L

(04)

| | | | | |
|---|---|---|---|---|
| ○ | ○ | ✳ | ✳ | 12 |
| ○ | ? | ✳ | ○ | 15 |
| △ | △ | ✳ | ⊠ | 13 |
| △ | ✳ | ✳ | ✳ | 9 |
| 14 | 14 | 8 | 13 | |

இங்கு தரப்பட்டுள்ள கூடுகளினுள்ளே இருக்கும் உருக்களுக்கு யாதாயினும் ஒரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உருக்களின் பெறுமதிகளின் கூட்டுத்தொகை கிடையாகவும், நிலைக்குத்தாகவும் தரப்பட்டுள்ளன. உரு தரப்படாத -?- என்ற குறியீட்டினால் காட்டப்படும் கூட்டினுள்ளே இடப்பட வேண்டிய உரு,

(1) ⊠ (2) △ (3) ○

கல்வி Education அධ්‍යාපන

(05) பின்வரும் கூடுகளில் உள்ள வாக்கியங்களின் நிகழ்வுகளை ஒழுங்குமுறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

A வீட்டுக்குள் இருந்த நாய் குரைக்க ஆரம்பித்தது.

B வீட்டில் இருந்தவர்கள் திருடனை பார்த்து கத்தினார்கள்.


C திருடன் கூரை வழியாக வீட்டிற்குள் நுழைந்தான்.


D ஜன்னல் வழியாக திருடன் தப்பியோடினான்.


E வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த அனைவரும் எழுந்தனர்.


(1) E, A, C, D, B (2) C, A, E, B, D (3) D, A, B, E, C

(06) பின்வரும் கோலத்தைப் பாருங்கள். இக்கோலத்திற்கேற்ப வெற்றுக்கூட்டிற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

(07)

△ + △ = □

○ x ○ = △

□ - ○ = ✳


இங்கு தரப்பட்டுள்ள தொடர்புகளுக்கு இலக்கங்களுக்குப் பதிலாக குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எல்லா உருக்களுக்கும் 10 ற்குக் குறைவான எண்பெறுமானம் உண்டு. இவ்வுருக்களை அவற்றின் பெறுமானத்திற்கேற்ப ஒழுங்குமுறைப்படுத்தினால் கிடைக்கும் சரியான விடை,

(1) ○ △ ✳ □ (2) △ ○ □ ✳ (3) □ ✳ △ ○

(08) ஒரு குறித்த மாதத்தின் முதல் நாள் செவ்வாய்க்கிழமையும் கடைசி நாள் திங்கட்கிழமையும் ஆகும். அதன்படி, அம்மாதமாக இருக்கக்கூடியது,


(1) மே (2) செப்டெம்பர் (3) பெப்ரவரி

kalvi.lk

(09) 

இப்பெரிய சதுரமுகியைப் புள்ளிக்கோடுகளின் வழியே வெட்டுவதன் மூலம் நிழற்றப்பட்டுள்ள முறையிலான சிறிய கனவுருக்கள் எத்தனை பெறலாம்?


(1) 4 (2) 5 (3) 6


(10) 


உருவில் ஒரு சதுர மரக்குற்றி காணப்படுகின்றது. அதன் மேற்பரப்பில் மை பூசப்பட்டு புள்ளிக்கோடுகளின் வழியே சிறிய சதுரமுகிகளாக வெட்டி வேறாக்கப்படுகின்றது. அதன்படி, மூன்று முகங்களில் மட்டும் மை பூசப்பட்ட சிறிய சதுரமுகிகளின் எண்ணிக்கை,


(1) 4 (2) 6 (3) 8

(11) இவ்வுருவில் -?- குறியீடு இடப்பட்டுள்ள கூட்டிற்குப் பொருத்தமான பகுதியைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.




(1) 

(2) 

(3) 

(12) ஆசிமின் வயது பைசரின் வயதைப்போல் இரு மடங்காகும். கதிரின் வயது ஆசிமின் வயதைப்போல் இரு மடங்காகும். மூவரினது வயதுகளின் கூட்டுத்தொகை 28 வருடங்கள் எனின், ஆசிமின் வயது,

(1) 6 (2) 8 (3) 10


(13) கீழே தரப்பட்டுள்ள சொல் வரிசைகளில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத சொல் இடம்பெறும் சொல் வரிசையைத் தெரிவு செய்க.

(1) லீற்றர், கிலோகிராம், நிமிடம், மீற்றர் (2) புகையிரதம், பேருந்து, கப்பல், ஆகாய விமானம்

(3) தபாலகம், முத்திரை, வைத்தியசாலை, வங்கி


(14) நாதன் ஒவ்வொரு புதன்கிழமையும் அவரது தாத்தாவின் வீட்டிற்குச் செல்வான். அவன் இறுதியாக நேற்று முன்தினம் தாத்தாவின் வீட்டிற்குச் சென்றான். அதன்படி, அவன் இன்னும் எத்தனை நாட்களில் மீண்டும் தாத்தாவின் வீட்டிற்குச் செல்வான்?

(1) 4 நாட்களில் (2) 5 நாட்களில் (3) 3 நாட்களில்

(15) 



இவ்வுருவின்படி, HG யின் நீளம்,

(1) 6cm (2) 5cm (3) 7cm

(16) 



இக்கடிகார முகத்தில் நண்பகல் 12.00 மணி காட்டப்பட்டுள்ளது. அதன்படி, இன்னும் 36 மணித்தியாலங்களின் பின் இக்கடிகார முகம் காட்டும் நேரம்,

(1) முற்பகல் 6.00 (2) நண்பகல் 12.00 (3) நள்ளிரவு 12.00

17) 


செவ்வக வடிவமொன்றில் P, Q, R எனும் இடங்கள் அமைந்துள்ள முறைகளை இவ்வுரு காட்டுகின்றது. O எனும் இடத்திலிருந்து ஒவ்வொரு இடத்திற்குமுள்ள தூரத்தின்படி, மிகக் குறைந்த தூரத்திலிருந்து மிகக் கூடிய தூரம் வரையுள்ள ஒவ்வொரு இடத்தினதும் ஆங்கில எழுத்துக்களை எழுதினால் கிடைப்பது,

(1) R, Q, P (2) P, R, Q (3) Q, R, P

18) 


இவ்வுருவின்படி, ஒருவர் கொழும்பிற்குச் செல்வதற்காக நிற்க வேண்டியது,

(1) A எனும் பேருந்துத் தரிப்பிடத்தில்

(2) B எனும் பேருந்துத் தரிப்பிடத்தில்

(3) கூறமுடியாது.

19) ஒவ்வொரு மாதத்திலும் உள்ள நாட்களின் எண்ணிக்கையை அதிகரித்துச் செல்லும் ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.


(1) பெப்ரவரி - ஜுலை - ஆகஸ்ட் (2) ஏப்ரல் - செப்டெம்பர் - டிசம்பர் (3) பெப்ரவரி - ஜுன் - ஒக்டோபர்

20) எல்லா மாடுகளுக்கும் நான்கு கால்களும் ஒரு வாலும் உண்டு. நான்கு கால்களும் ஒரு வாலும் உள்ள ஓர் பிராணி வீதியில் குரைத்துக் கொண்டிருந்தது. அதன்படி, அப்பிராணி ஓர் மாடு ஆகும். இக்கூற்று,

(1) சரியானது (2) பிழையானது (3) கூறமுடியாது

kalvi.lk

சுட்டெண்:-.........................................

(21) 


இப்பெட்டியில் அடுக்கத்தக்க ஒருபக்க நீளம் 2cm ஐக் கொண்ட சதுரமுகிகளின் மிகக் கூடிய எண்ணிக்கை,

(1) 16 (2) 12 (3) 14

(22) குறிப்பிட்ட மணியொன்று கீழே அட்டவணையில் குறிப்பிட்ட நேரங்களின்படி ஒலித்தது.

| 1 வது முறை | 2 வது முறை | 3 வது முறை | 4 வது முறை |
|---|---|---|---|
| பி.ப 2.45 | பி.ப 3.00 | பி.ப 3.30 | பி.ப 4.15 |

மேலேயுள்ள கோலத்தின்படி, மணியானது 5 வது முறையாக எத்தனை மணிக்கு ஒலிக்கும்?

(1) பி.ப 5.15 (2) பி.ப 5.00 (3) பி.ப 5.30

(23) 2022 ஆம் ஆண்டு நாட்காட்டி ஒன்றைப் பார்த்த திவ்யா "என்னுடைய பிறந்த தினம் இதில் இல்லை" எனக் கூறினாள். அதன்படி, அவளின் பிறந்த தினமாக இருக்கக்கூடியது,

(1) ஜுன் 31 (2) டிசம்பர் 31 (3) பெப்ரவரி 29

(24) வகுப்பொன்றில் உள்ள பிள்ளைகள் தொடர்பான விபரங்கள் கீழே காணப்படுகின்றன.


ஆண் பிள்ளைகள் - 16, பெண் பிள்ளைகள் - 20, உயரமான ஆண் பிள்ளைகள் - 9, குட்டையான பெண் பிள்ளைகள் - 12

அதன்படி, அவ்வகுப்பிலுள்ள உயரமான பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை,

(1) 9 (2) 17 (3) 21


(25) ஒரு வரிசையில் யமுனாவிற்கு முன்னால் 6 பேரும் பின்னால் 12 பேரும் நின்றுகொண்டிருந்தனர். அவ்வரிசையில் பரானாவிற்கு முன்னால் 10 பேரும் பின்னால் 8 பேரும் நின்றுகொண்டிருந்தனர். அதன்படி, யமுனாவிற்கும் பரானாவிற்கும் இடையில் எத்தனை பேர் நின்றுகொண்டிருந்தனர்?

(1) 3 (2) 5 (3) 4

(26) 


இவ்வுருவின்படி, இறைச்சி சாப்பிடாத பிள்ளை,

(1) கதிர் (2) ரவி (3) வசீம்

(27) 


1 ஆம் சந்தர்ப்பம் 2 ஆம் சந்தர்ப்பம் 3 ஆம் சந்தர்ப்பம்

1, 2, 3 ஆகிய சந்தர்ப்பங்களில் சவர்க்காரக் கட்டிகள் அடுக்கப்பட்டுள்ள கோலத்தின்படி, 5 ஆம் சந்தர்ப்பத்தில் அடுக்கப்பட வேண்டிய சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை,

(1) 10 (2) 15 (3) 18


(28) ஒரு வருடத்தில் ஜனவரி மாதத்தில் இருக்கத்தக்க மிகக் கூடிய சனிக்கிழமைகளினதும் மிகக் கூடிய செவ்வாய்க்கிழமைகளினதும் கூட்டுத்தொகை,

(1) 9 (2) 10 (3) 11

(29) 


பாத்திமா உண்டியலில் இட்ட நாணயக் குற்றிகளின் எண்ணிக்கைத் தொடர்பான விபரங்களை இவ்வட்ட வரைபு காட்டுகின்றது. பாத்திமாவின் உண்டியலில் இருந்த ரூபாய் 2.00 நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி ரூபாய் 24.00 ஆகும். அதன்படி, அவளது உண்டியலில் இருந்த ரூபாய் 5.00 நாணயக் குற்றிகளின் மொத்தப் பெறுமதி,

(1) ரூபாய் 12.00 (2) ரூபாய் 24.00 (3) ரூபாய் 30.00

(30) 

கூட்டினுள் உள்ள உருக்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றுக்கூட்டிற்குள் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

kalvi.lk

(31) பின்வரும் 1, 2, 3, 4 ஆகிய சந்தர்ப்பங்களில் உருக்கள் வரையப்பட்டுள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.





.....................

(1) 

(2) 

(3) 

(32) வட்ட வடிவமான ஓர் பீங்கான் இரு துண்டுகளாக உடைக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒரு துண்டு முதல் உருவில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, மீதித் துண்டினைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.



(1) 


(2) 

(3) 

(33) 4 மீற்றர் நீளம், 2 மீற்றர் அகலமான சுவரொன்றுக்கு வர்ணம் பூசுவதற்கு 2 லீற்றர் வர்ணப்பூச்சு தேவைப்பட்டது. அதன்படி, 8 மீற்றர் நீளம், 1 மீற்றர் அகலமான சுவரொன்றுக்கு வர்ணம் பூசுவதற்கு எத்தனை லீற்றர் வர்ணப்பூச்சு தேவைப்படும்?

(1) 4 லீற்றர் (2) 2 லீற்றர் (3) 3 லீற்றர்

(34) தோடம்பழமொன்றும் மாம்பழமொன்றும் அன்னாசிப்பழமொன்றும் தராசில் நிறுக்கப்பட்ட முறைகள் கீழே உள்ள உருக்கள் காட்டுகின்றன. மூன்று தராசுகளும் சமநிலையில் உள்ளன.





அதன்படி, அன்னாசிப்பழத்தின் நிறை,

(1) 600g (2) 800g (3) 900g

(35) ஹுசைன் பாடசாலைக்குச் செல்வதற்காக வீட்டிலிருந்து வெளியேறும்போது, கடிகார முகத்தில் மணித்தியால முள் 3 இற்கும் 4 இற்கும் இடையிலும் நிமிட முள் 9 இலும் இருந்தது. அவன் பாடசாலைக்குச் செல்வதற்கு 20 நிமிடங்கள் எடுத்தது. அதன்படி, அவன் பாடசாலையை அடையும்போது நேரம்,

(1) 4.05 (2) 3.55 (3) 4.10

(36) 

இவ்வுருவில் காணப்படும் முக்கோணிகளின் எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 6


(37) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

நாட்டினிலே நடப்பதெல்லாம்
நல்ல பல செய்தியெல்லாம்
வீட்டினிலே காட்டிவிடும்
வித்தையான பெட்டியிது!

வீட்டினுள்ளே திரையரங்கம்
வீடெல்லாம் கலைமுழங்கும்
ஏட்டிலுள்ள கல்வியெல்லாம்
எளிதினிலே ஊட்டிவிடும்

இப்பாடல் எதைப் பற்றி கூறப்படுகின்றது?

(1) வானொலி (2) பத்திரிகை (3) தொலைக்காட்சி

(38) 


எறும்பொன்று இக்கம்பிச் சட்டகத்தைச் சுற்றி ஒரு தடவை பயணித்தது. அதன்படி, எறும்பு பயணித்த மொத்தத் தூரம்,

(1) 28cm (2) 48cm (3) 32cm

(39) இந்நகரம் சிறிதளவு மழை பெய்யும்போதும் நீரில் மூழ்கும். இதற்கான காரணமாக இருக்கக்கூடியது,

(1) அந்நகரில் அதிகளவு மக்கள் வாழ்கின்றனர் என்பதனாலாகும்.

(2) நீர் வழிந்து செல்வதற்கு வாய்க்கால்கள் இல்லாமை என்பதனாலாகும்.

(3) அந்நகரில் கட்டிடங்கள் அதிகம் என்பதனாலாகும்.

(40) நாதன் தினமும் ஒரு செவ்விளநீர் அருந்துவான். அவன் அதனை காலை உணவு உட்கொள்வதற்கு முன்னர் அருந்துவான். இதிலிருந்து கருதப்படுவது,

(1) நாதன் மாலை வேளையில் செவ்விளநீர் அருந்துவதில்லை என்பதாகும்.

(2) நாதன் வேறு பான வகைகள் அருந்துவதில்லை என்பதாகும்.

(3) நாதன் செவ்விளநீர் அருந்தாத நாட்களும் உள்ளன என்பதாகும்.

kalvi.lk

( முழுப் பதிப்புரிமையுடையது ) ( All Rights Reserved )

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2023

தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-11

## வினாத்தாள் - II

சுட்டெண் :- ..........................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

விடியற்காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயலை நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் வெள்ளைப் புறாக்களைப்போல வெண்ணிற ஆடையுடன் பள்ளிச் செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

(i) பந்தியில் வந்துள்ள இரட்டைக்கிளவி, அடுக்குமொழி போன்றவற்றை எழுதுக. ..........................................

(ii) பந்தியில் இடம்பெற்றுள்ள பெயரடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக. ..........................................

(iii) "தொழிலாளர்கள்" என்பதைக் குறிக்கும் சொல்லை தெரிவுசெய்து எழுதுக. ..........................................

(iv) பந்தியிலுள்ள ஒருமை, பன்மை சொற்சோடியை தெரிவுசெய்து எழுதுக. ..........................................

(v) "புத்துணர்வோடு" இதனை பிரித்தெழுதுக. ..........................................

**(02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான வினைச்சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) நான் நண்பனுடன் தொலைபேசியில் .......................... ( உரையாடுகின்றோம் , உரையாடினேன் )

(ii) எனது தங்கை கதை .......................... ( கூறினாள் , கூறினான் )

(iii) தம்பி விடுமுறைக்கு சித்தப்பா வீட்டுக்குச் .......................... ( சென்றாள் , சென்றான் )

(iv) பட்சிகளின் இனிமையான கானம் காற்றில் .......................... ( கலந்தது , கலந்தன )

Education கல்வி அத்யாபன

**(03) பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துப்பிழைகளை நீக்கி எழுதுக.**

(i) மாணவர்கள் பரீற்சையிள் சித்தியடைந்தணர் :- ..........................................

(ii) மனிதர்கல் உயரமாண மலையிள் ஏறிச் சென்றனர் :- ..........................................

**(04) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தை வினா வாக்கியமாக மாற்றி எழுதுக.**

காற்று வேகமாக வீசியது :- ..........................................

**(05) இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) வல்லின, மெல்லின ஆகிய எழுத்துக்களைக் கொண்டமைந்த சொல் .......................... ( பலாப்பழம் , மீன்முள் )

(ii) இடையினம், வல்லினம் ஆகிய எழுத்துக்களைக் கொண்டமைந்த சொல் .......................... ( பாற்குடம் , வாட்போர் )

**(06) பின்வரும் பழமொழியின் மீதிப் பகுதியினைப் பூரணப்படுத்துக.**

தொட்டிற் பழக்கம் ..........................................

**(07) பின்வரும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

விவசாயி வயலுக்குச் சென்று நாற்று நட்டான்.

(i) .......................... (ii) ..........................

**(08) பின்வரும் உவமைத் தொடர்களுக்குரிய கருத்தை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோடுகளின் மீது எழுதுக.**

( பிரியா நட்பு , வேகமாகப் பரவுதல், உடன் மறைவு, மிக அரிதாக )

(i) அத்தி பூத்தாற்போல :- .......................... (ii) காட்டுத் தீபோல :- ..........................

**(09) பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

மான் கூட்டம் பசும் புல்லை மேய்ந்தது :- ..........................................

**(10) கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) It's .......................... ( an / a ) owl. (ii) How many ........... ( brother / brother's ) do you have?

kalvi.lk

**(11) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

எனக்கு தாகமாக இருக்கிறது :- ..........................................................................................

**(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) Come forward :- .............................................. (ii) Please be silent. :- ..........................................

**(13) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தினைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

நான் பாடம் படிக்கிறேன் :- ..........................................................................................

**(14) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

அ(ப்)பி பாசல(ட்)ட யமு :- ..........................................................................................

(15) கீழே காட்டப்பட்டுள்ள வடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க திண்மங்கள் இரண்டும் யாவை?




(i) .............................................. (ii) ..............................................

(16) “இருபதாயிரத்து எண்ணூறு” என்னும் எண்ணிலிருந்து ஒன்றைக் கழித்தால் கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக.

..........................................................................................

(17)



(i) இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக. ..............................

(ii) $\frac{1}{2}$, 0.9, $\frac{7}{10}$, 0.3 இவ்வெண்களில் மிகச் சிறிய, மிகப் பெரிய எண்களை எழுதுக. ..........................

(18)

| | |
|---|---|
| 114 | 188 |
| 165 | 144 |

இக்கட்டத்தினுள் உள்ள எண்களுள் 6 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய இலக்கங்களை எழுதுக.


..........................................................................................

(19) V, X, I ஆகிய உரோம எண்குறிகளை அமைப்பதற்கு ரமேஷிற்கு ஒரே சம நீளமுள்ள 5 ஈர்க்குத் துண்டுகள் தேவைப்பட்டன. அதற்கேற்ப 20 இலும் குறைந்த ஓர் எண்ணை உரோம எண்குறிகளில் வகைகுறிப்பதற்கு ரமேஷிற்கு 6 ஈர்க்குத் துண்டுகள் தேவைப்பட்டன. அவ்வெண்ணை உரோம எண்குறிகளில் எழுதுக. ..........................

Education

(20) பி.ப 6.00 இற்கு வீட்டிலிருந்து சென்ற அண்ணா மறுநாள் மு.ப 11.45 இற்கு மீண்டும் வீட்டிற்கு வந்தார். அதன்படி, அவர் வீட்டிற்கு வெளியே செலவிட்ட காலத்தை எழுதுக. ..........................................

(21)





P, Q, R எனும் மூன்று நகரங்களின் அமைவு படத்தில் காட்டப்பட்டுள்ளது. P இற்கும் Q இற்கும் இடையிலான தூரம் 279km ஆகும். P இற்கும் R இற்கும் இடையிலான தூரம் 534km ஆகும். அதன்படி, Q இற்கும் R இற்கும் இடையிலான தூரம் எவ்வளவு? ..........................................

**(22) பின்வரும் சிட்டையைப் பூர்த்திச் செய்க.**

| பொருட்கள் | 1kg இன் விலை | | கொள்வனவு செய்த அளவு | விலை | |
|---|---|---|---|---|---|
| | ரூபாய் | சதம் | | ரூபாய் | சதம் |
| (i) மிளகாய் | 1200 | 00 | 250g | .............. | .............. |
| (ii) தேயிலை | 800 | 00 | 100g | .............. | .............. |
| (iii) கடலை | .............. | .............. | 500g | 300 | 00 |
| (iv) | | | மொத்தப் பணம் | .............. | .............. |

(23) பாத்திரமொன்றில் 1 லீற்றர் 200 மில்லிலீற்றர் அளவு தேன் உள்ளது. அத்தேனை ஒவ்வொன்றும் 150 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்? ..........................................

(24) P, Q, R, S, T எனப் பெயரிடப்பட்டுள்ள ஐந்து வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ள கூட்டில் காட்டப்பட்டுள்ளன.





இவ்வடிவங்களில்,

(i) அதிக எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையக்கூடிய வடிவத்தின் ஆங்கில எழுத்து யாது? ..........................................

(ii) குறைந்த எண்ணிக்கையான சமச்சீர்க் கோடுகள் வரையக்கூடிய வடிவத்தின் ஆங்கில எழுத்து யாது? ..........................................

(25)





யமுனா குறித்தவொரு இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்து 200 மீற்றர் வீதம் வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு ஆகிய திசைகளுக்குப் பயணம் செய்தாள். அதன்படி, அவள் தற்போது இருக்கும் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த இடம் எத்திசையில் அமைந்துள்ளது? ..........................................

kalvi.lk

சுட்டெண்:-..........................................

(26)





இந்த எண்சட்டத்தில்,

**(i)** வகைகுறிக்கப்படும் எண்ணை எழுத்தில் எழுதுக. ..........................................

**(ii)** கோல் A யிலுள்ள மணிகளினால் வகைகுறிக்கப்படும் பெறுமானம் யாது? ..............................

(27)



**(i)** இங்கு தரப்பட்டுள்ள உருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன?..........................................

**(ii)** இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணத்திலும் சிறிய கோணங்கள் உள்ளன?..........................................


(28) தரப்பட்டுள்ள எண் கோலங்களில் அடுத்து வரும் எண்களை எழுதுக.

**(i)** 1, 4, 9, 16, ........................ **(ii)** 35, 29, 23, 17, ............................

(29) **(i)** வரைபில் உள்ள தகவல்களுக்கேற்ப அட்டவணையில் இருக்கும் வெற்றிடத்தை நிரப்புக.

**(ii)** அட்டவணையிலுள்ள தகவல்களுக்கேற்ப வரைபைப் பூரணப்படுத்துக.

| **பூ வகை** | **பூக்களின் எண்ணிக்கை** |
|---|---|
| ஓக்கிட் | 12 |
| ரோஜா | 15 |
| மல்லிகை | .......................... |
| செவ்வந்தி | 6 |




*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) ஒரே மாகாணத்திற்குரிய இரு மாவட்டங்கள்,
(1) புத்தளம், குருநாகல் (2) கண்டி, களுத்துறை (3) வவுனியா, பதுளை

(31) வீட்டிலுள்ள மீன் தொட்டியில் இருக்கும் மீன்களைப் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படும் மிக உகந்த உபகரணம்,
(1) கரப்பு (2) கரைவலை (3) அத்தாங்கு

(32) தரப்பட்டுள்ள மரங்களுள் ஆணிவேர் உள்ள மரம்,
(1) கித்துள் (2) பப்பாசி (3) பனை

(33) கீழே தரப்பட்டுள்ள தாவரங்களில் முட்களைக் கொண்ட தாவரங்கள் அல்லாதது,
(1) கள்ளி, கண்டங்கத்தரி (2) அகத்தி, வெண்டி (3) ரோஜா, வட்டுக்கத்தரி

(34) கதிர்காமம் நகரத்தின் அருகில் பாய்கின்ற கங்கை,
(1) மாணிக்க கங்கை (2) களு கங்கை (3) களனி கங்கை

(35) நாருரு வேருள்ள தாவரங்கள்,
(1) குப்பைமேனி, ஆடாதோடை (2) ஆமணக்கு, நொச்சி (3) நெல், வெங்காயம்

(36) மத்தள விமான நிலையம் அமைந்துள்ளது,
(1) தென் மாகாணத்தில் (2) மேல் மாகாணத்தில் (3) கிழக்கு மாகாணத்தில்

(37) பிரதேசமொன்றில் விசர்நாய்க்கடிக்காக நாய்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும் தினத்தை பிரதேச மக்களுக்கு அறிவிப்பதற்கு மிக உகந்த ஊடகம்,
(1) தொலைக்காட்சி (2) ஒலிபெருக்கி (3) வானொலி

(38) சிறு களிமண் உருண்டைகளைக் கொண்டுவந்து தனது வீட்டை அமைத்துக்கொள்ளும் பூச்சி,
(1) தும்பி (2) வெட்டுக்கிளி (3) குளவி

(39) இலங்கையின் கடைசி இராசதானி,
(1) கண்டி (2) அநுராதபுரம் (3) பொலன்னறுவை

(40) தனது வீட்டை அமைத்துக்கொள்வதற்கு விசேட திறமையைக் காட்டும் பிராணிகள்,
(1) குயில், காகம் (2) சிலந்தி, தூக்கணாங்குருவி (3) வண்ணத்துப்பூச்சி, நுளம்பு

(41) ஆடைகளைத் தைக்கும்போது உடலின் அளவுகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்துவது,
(1) அளவுநாடா (2) மீற்றர்கோல் (3) அடிமட்டம்

(42) பத்துக் கால்களைக் கொண்ட பிராணிகள்,
(1) மரவட்டை, பூரான் (2) தேள், சிலந்தி (3) இறால், நண்டு

kalvi.lk

(43) செதில்களால் உடல் மூடப்பட்ட பிராணிகள்,
(1) நத்தை, ஆமை (2) மீன், பாம்பு (3) சிப்பி, மண்புழு

(44) நீரப் பாத்திரம் ஒன்றில் இட்டு கலக்கும்போது நீரின் நிறத்தை மாற்றுவது,
(1) கொண்டிஸ் (2) வினாகிரி (3) உப்பு

(45) பொருட்கள் அடுக்கப்படும் பெட்டியொன்றின் வெளியே காணக்கிடைக்காத குறியீடாக இருக்கக்கூடியது,
(1)  (2)  (3) 

(46) ஒலிம்பிக் கொடியின் பின்னணியில் அமைந்துள்ள நிறம்,
(1) சிவப்பு (2) மஞ்சள் (3) வெள்ளை

(47) குறுந்தூர ஓட்டப் போட்டியை ஆரம்பிக்க வழங்கப்படும் மூன்று கட்டளைகளை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,
(1) ஆயத்தமாகு (Set), குறிப்பிற்குச் செல் (On your mark), ஓடு (Go)
(2) குறிப்பிற்குச் செல் (On your mark), ஆயத்தமாகு (Set), ஓடு (Go)
(3) குறிப்பிற்குச் செல் (On your mark), ஓடு (Go), ஆயத்தமாகு (Set)

(48) "படகமுவ" காடு அமைந்துள்ளது,
(1) அநுராதபுரத்தில் (2) கண்டியில் (3) குருநாகலையில்

(49) கொண்டு செல்லும்போது அதிகம் பாதிப்புக்குள்ளாவது,
(1) தக்காளி (2) பலா (3) உருளைக்கிழங்கு

(50) "பம்பரகந்த" நீர்வீழ்ச்சி எந்த ஆற்றிலிருந்து உருவானது,
(1) மகாவலி கங்கையில் (2) வளவ கங்கையில் (3) களனி கங்கையில்

(51) வட்டக்கண்ணி தாவரத்தின் இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி,
(1) கறையான் (2) அந்துப்பூச்சி (3) மின்மினிப்பூச்சி


(52) கொன்றைப் பூவின் நிறம்,
(1) மஞ்சள் (2) சிவப்பு (3) வெள்ளை

(53) நீல நிறத்திலும் பச்சை நிறத்திலும் அச்சிடப்பட்டுள்ள நாணயத் தாள்களை ஒழுங்குமுறையாக எழுதினால் கிடைப்பது,
(1) ரூபாய் 100.00 - ரூபாய் 500.00 (2) ரூபாய் 20.00 - ரூபாய் 5000.00 (3) ரூபாய் 50.00 - ரூபாய் 1000.00

(54) சகல வருடத்திலும் மே மாதம் 1 ஆம் திகதி கொண்டாடப்படுவது,
(1) சர்வதேச சிறுவர் தினம் (2) சர்வதேச தொழிலாளர் தினம் (3) சர்வதேச சுற்றாடல் தினம்

(55) தனது நாக்கை வெளியே நீட்டி பூச்சிகளைப் பிடித்து உணவு உண்ணும் பிராணிகள்,
(1) பல்லி, தவளை (2) அணில், நத்தை (3) முயல், பூனை

(56) பாலினால் தயாரிக்கப்படாத உணவு வகைகள்,
(1) தயிர், வெண்ணெய் (Butter) (2) பாற்கட்டி (Cheese), யோகட் (3) பாணி, ஜேம் (Jam)

(57)



பிள்ளையொன்று செய்த பரிசோதனையை இவ்வுரு காட்டுகிறது. பிள்ளை இப்பரிசோதனையை செய்தது,
(1) சூரிய கிரகணம் நிகழும்போது சூரியனின் விம்பத்தை சுவரின் மீது பார்ப்பதற்கு
(2) வானவில்லின் வர்ணங்களை பார்ப்பதற்கு
(3) சூரிய ஒளியிலுள்ள மூல வர்ணங்களைப் பார்ப்பதற்கு

(58) ஒரு குழுவில் ஒருவர் மட்டும் விளையாடக்கூடிய இரண்டு விளையாட்டுக்கள்,
(1) டாம், சதுரங்கம் (2) பூப்பந்து ( பட்மின்டன் ), டென்னிஸ் (3) மேசைப்பந்து, வலைப்பந்து

(59) வானவில்லின் ஏழு வர்ணங்களுள் மிக மேலே மற்றும் மிகக் கீழே அமைந்துள்ள வர்ணங்கள்,
(1) சிவப்பு, ஊதா (2) நீலம், பச்சை (3) மஞ்சள், ஊதா


**(60) "தினமும் பத்திரிகை வாசிப்பது நல்ல பழக்கமாகும்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக.**
**(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)**

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

kalvi.lk




## தரம் 5

# புலமைத் தேடல்

யாழ்ப்பாணம், வடமராட்சி செ.நிஷாந்தன், செ.விமல் ஆசிரியர்கள் எழுதிய புலமைத் தேடல் புலமைப்பரிசில் எதிர்பார்க்கை மாதிரி வினாத்தாள்கள்

📮 நாடு பூராகவும் CASH ON DELIVERY ( தபால்காரரிடம் விலை 1250/- செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் )

**ORDER NOW**

**HOME DELIVERY**

075 287 1457

BUY BOOKS

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page